**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 135 of 2024

DATE : 20.05.2025

Depositions of witness for Prosecution

PW 1

| Name | **செல்லமணி** | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | **சிவசாமி** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2025

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் சிவகாசியில் உள்ள சிவகாமிபுரம் காலனியில் வசித்து வருகிறேன். நான் பட்டாசு ஆலையில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் விபத்தில் இறந்தவர் எனது கணவர். 16.03.2022ம் தேதி நானும் எனது கணவர், மருமகன், மகள் ஆகியோர்கள் எனது பேரனுக்கு பெயர் வைப்பதற்காக அருப்புக்கோட்டை கோவிலாங்குளத்திற்கு பஸ்ஸில் புறப்பட்டு பெயர் வைத்துவிட்டு திரும்பவும் எனது தாயார் ஊரான களத்தூருக்கு வந்தோம். மறுநாள் காலையில் எனது கணவர் எங்களை எனது தாயார் வீட்டில் விட்டு சென்றுவிட்டு முத்தையா என்பவருடன் நடந்து மதுரை ரோட்டில் உள்ள வடக்கில் இருந்து தெற்காக நத்தம்பட்டி பஸ் ஸ்டாப்பிற்கு நடந்து சென்றார்கள். சுமார் காலை 6.30 மணியளவில் பின்புறமாக வந்த டாடா ஏஸ் வேகமாக வந்து பாலத்தின் ஓரத்தில் சென்ற எனது கணவரை மோதி விபத்து ஏற்படுத்தியது. அதில் எனது கணவருக்கு காலில் காயமும், மூக்கில் இரத்தம் வந்தது. காயம்பட்ட எனது கணவரை முத்தையா என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். முத்தையா என்பவர் எனது தம்பி சின்னஇருளப்பனுக்கு விபத்து பற்றி தகவல் சொல்லி சின்ன இருளப்பன் எனக்கு தகவல் சொன்னார். தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் எனது கணவரை பரிசோதித்து இறந்துவிட்டதாக கூறினார்கள். இது சம்மந்தமாக நத்தம்பட்டி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு